செ.வெ.எண். 02 நாள் : 06.01.2017

# வர்தா புயலினால் விழுந்த மரங்களை அகற்றி தற்காலிகமாக பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடல்கள் மற்றும் காலி இடங்களில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளவைகளை அகற்றும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தகவல்

வர்தா புயலினால் விழுந்த மரங்களை அகற்றி தற்காலிகமாக பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடல்கள் மற்றும் காலி இடங்களில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள மரங்கள் மற்றும் மரக்கழிவுகளை அகற்றும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. கடந்த 12.12.2016 அன்று சென்னையில் சுமார் 130 கி.மீ. வேகத்தில் தாக்கிய வர்தா புயலினால் பெருநகர சென்னை மாநகராட்சியில் சுமார் 17000க்கும் மேற்பட்ட மரங்கள் சாலைகளில் விழுந்ததனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இதனை உடனடியாக அப்புறப்படுத்தும் பணியில் பெருநகர சென்னை மாநகராட்சியைச் சார்ந்த 19,411 பணியாளர்களும், பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட 3,200 பணியாளர்கள் என மொத்தம் 22,611 பணியாளர்கள் இரவு பகலாக பணியில் ஈடுபடுத்தப்பட்டு பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் மரங்கள் அகற்றப்பட்டது.

பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பைக் கொட்டும் வளாகங்களுக்கு மரக்கழிவுகளை எடுத்து செல்லும் காலவிரயத்தை தவிர்க்கும் வகையில் தற்காலிகமாக பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடல் மற்றும் காலி இடங்களில் சேகரிக்கப்பட்டன. தற்பொழுது, பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடல் மற்றும் காலி இடங்களில் சேகரிக்கப்பட்ட மரங்கள் மற்றும் மரக்கழிவுகளை அகற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக, (24.12.2016 அன்று) இந்திய அரசு நிறுவனமான மெட்டல் ஸ்க்ராப் டிரேடிங் கார்ப்பரேஷன் (M.S.T.C.) மூலம் மின்னணு ஏலம் மூலம் விலைப்புள்ளி கோரப்பட்டது. அதில் குறைந்த விலைப்புள்ளி பெறப்பட்டதால் இவை ரத்து செய்யப்பட்டு, மறுபடியும் 30.12.2016 அன்று மின்னணு ஏலம் மூலம் விலைப்புள்ளி பெறப்பட்டது. கூடுதலாக, மரக்கழிவுகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட 78 இடங்களிலும் உள்ளது உள்ளபடி என்ற நிபந்தனையின்படி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்களை 31.12.2016 அன்று பெட்டிகளில் இடும் முறையில் விலைப்புள்ளி பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து மரக்கழிவுகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட 78 இடங்களிலும் 02.01.2017 அன்று திறந்த நிலை ஏலத்தின் மூலம் விலைப்புள்ளி கோரப்பட்டது. இவற்றில் அதிக விலைப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மரங்கள், கிளைகள் மற்றும் மரக்கழிவுகளை

அகற்றி சுத்தப்படுத்திட வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மரங்கள் மற்றும் மரக்கழிவுகள் மொத்தம் ரூ.50.6 இலட்சம் மதிப்பீட்டில் ஏலம் விடப்பட்டுள்ளது.

பணி ஆணை வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மூலம் மரங்கள், கிளைகள் மற்றும் மரக்கழிவுகள் அகற்றும் பணி விரைந்து நடைபெற்று வருகிறது. மேலும், மரக்கழிவுகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள 78 இடங்களில் உள்ள மரக்கழிவுகளில் சமூக விரோதிகளால் தீ விபத்து ஏற்படுவதை தடுத்திட தீயணைப்பு துறையின் மூலம் தீயணைப்பு வாகனம் நிறுத்தப்பட்டு 24 மணிநேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. கூடுதலாக, பெருநகர சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த உதவி செயற்பொறியாளர்கள் நிலையில் அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டு சுழற்சி முறையில் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மரக்கழிவுகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள இடங்களிலிருந்து லாரிகளில் பெரிய மரத்துண்டுகளாக ஏற்ற முடியாது என்பதால், பணியாளர்கள் மற்றும் மர அறுவை இயந்திரங்களை கொண்டு சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்டு மரங்களை அகற்றும் பணி தொய்வின்றி நடைபெற்று வருகின்றது. இப்பணி விரைவில் முடிக்கப்பட்டு விளையாட்டுத் திடல்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

பொதுமக்கள் தங்கள் அருகாமையில் உள்ள மரக்கழிவுகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள 78 இடங்களில் பிற நபர்கள் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான முறையில் செயல்பட்டால் பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறையில் உள்ள **044–2561 9206, 2561 9511, 2538 4965, 2538 3694, 2536 7823, 2538 7570** என்ற தொலைபேசி எண்களிலும், **1913** என்ற புகார் பிரிவிலும் மற்றும் சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்கள், மண்டல செயற்பொறியாளர்களுக்கும் தகவல் தெரிவிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**